நாள்: 03.06.2025

O.S. No. 45/2022

வா.சா.2..

பெயர்: கமலவேணி, க/பெ. வீரமணி

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1) என் மாமியார் வள்ளியம்மை என்ன படித்துள்ளார் என்றால் படிப்பறிவு இல்லாதவர். மாமியார் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் சொந்த நிலம் வைத்து விவசாயம் செய்து வருமானம் ஈட்டி வந்தார். அவர் கூலி வேலைக்கு சென்றது உண்டா என்றால் எனக்கு தெரிந்து அவர் சென்றதில்லை. என் மாமியாருக்கு சொந்தமான சொந்த நிலம் குறித்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். கொடிக்கால்பாளையம் விஸ்வமித்திரபுரம் கிராமத்தில் உள்ளது. அதன் சர்வே எண் தெரியாது. மேற்படி என் மாமியாருக்கு சொந்தமான நிலம் குறித்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

2) என் மாமனார் மாரியப்பன் தான் குடும்பத்தில் சாம்பாதிக்கக்கூடிய நபர் என்றாலும், அவர் தான் சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்த நபர் என்றாலும் சரிதான். எனவே, என் மாமனார் அவர் சாம்பாதித்து வந்த வரும்படியை கொண்டு தன் மனைவி பெயரில் பெயரளவில் தாவா சொத்தை கிரயம் பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனவே, தாவா சொத்து என் மாமியார் வள்ளியம்மைக்கு அவர் சுய சாம்பாதித்த தனிப்பட்ட சொத்து அல்ல என்று சொன்னால் என்றால் தாவா சொத்து என் மாமனார் மற்றும் மாமியாருக்கு பொது சொத்தாகும். என் மாமியார் இறந்த தேதி விவரம் தெரியுமா என்றால் 17.04.2002-ல் இறந்தார். என் மாமனார் இறந்த தேதி விவரம் தெரியுமா என்றால் 22.12.2014-ல் இறந்தார்.

3) என் மாமனார் அவரது கடைசி காலம் வரை நல்ல நிலையில் தான் இருந்தார் என்றால் இறப்பதற்கு ஒரு ஆண்டிற்கு முன்பு என் மாமனார் கீழே விழுந்து அடிப்பட்ட காரணத்தினால் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். என் மாமனாருக்கு என்ன உடல்நிலை குறைபாடு ஏற்பட்டதென்றால் கீழே விழுந்ததால் முகத்தில் அடிபட்டிருந்தது. என்ன மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் ஆரம்பத்தில் திருவாரூர் மருத்துவக்கல்லூரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். பின்னர் தஞ்சாவூர் வினோதகன் மருத்துவ

மனையில் மேல்சிகிச்சை எடுத்துக்கொண்டார். எவ்வளவு காலம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் ஒரு வார காலமும், தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையில் ஒரு வார காலமும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். மேற்படி என் மாமனார் சிகிச்சைக்கு யார் உடனிருந்து கவனித்தார்கள் என்றால் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்ற போது நான் உடனிருந்து கவனித்துக்கொண்டேன். தஞ்சாவூர் மருத்துவமனையில் சிகிச்சையின்போது என் கொழுந்தனார் பிரதிவாதி மகேந்திரன் உடனிருந்து கவனித்துக்கொண்டார். சிகிச்சை செலவுகளுக்கு நானும் என் கணவரும் பணம் கொடுத்தோம்.

4) என் மாமனார் மருத்துவ சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் அனுமதித்திருந்த போது மருத்துவமனையால் வழங்கப்படும் புற நோயாளி அல்லது உள்நோயாளி அனுமதி சீட்டு எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. என் மாமனாருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது தொடர்பாக மேற்சொன்ன விவரங்களை என் கணவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்பது குறித்து படித்து பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு என் மாமனார் எழுதிக்கொடுத்த **வா.சா.ஆ.2** எப்போது ஏற்பட்டதென்றால் என் மாமனார் உயிருடன் இருந்தபோது எழுதிக்கொடுக்கப்பட்டதாகும். அப்போது என் மாமனார் கீழே விழுந்து அடிப்பட்டிருந்த காரணத்தினால் சுய நினைவு இல்லாமல் இருந்தார்.

5) என் மாமனார் செட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ.2 ஏற்படுத்திய சமயத்தில் சுய நினைவு இல்லாமல் இருந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையிலிருந்து உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் எத்தனை மாதங்கள் கழித்து வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டதென்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் என் மாமனார் வேறு சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் இல்லை. என் மாமனார் தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனையில்

இருந்து உடல் நிலை குணமான பிறகு தான் விடுவிக்கப்பட்டார் என்றால் பூரணமாக குணமாகவில்லை. பூரணமாக குணமாக காரணத்திற்காக மேல்சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்றால் இல்லை.

6) மருத்துவ மனை சிகிச்சைக்கு பிறகு என் மாமனார் யாருடன் வசித்து வந்தார் என்றால் கொஞ்ச நாள் எங்களுடன் இருந்தார். பிறகு பொதுவீடான என் கொழுந்தனார் வசித்து வரும் கொடிக்கால்பாளையம் வீட்டிற்கு சென்றுவிட்டார். என் மாமனார் சிகிச்சைக்கு பிறகு எங்களுடன் வசித்து வந்தார் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். என் மாமனார் எந்தக்காலத்திலும் எங்களுடன் வசிக்கவில்லை என்றாலும், பிரதிவாதி மகேந்திரன் உடன் தான் தனது கடைசி காலம் வரை வசித்து வந்தார் என்றாலும் சரியல்ல. என் மாமனார் எங்களுடன் வசித்து வந்த விவரம் குறித்து வழக்குரையில் சொல்லப் படவில்லை என்றால் இல்லை. நான் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ள வழக்கு சொத்திற்கான புல எண் தெரியுமா என்றால் புல எண்.56/6 ஆகும்.

7) என் மாமனார் அவரது மகன்களான என் கணவர் வீரமணி மற்றும் அவரது சகோதரர்களான பிரதிவாதி மகேந்திரன் மற்றும் வழக்கில் சேராத சேகர் ஆகியோர்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எதுவும் எழுதிக்கொடுத்துள்ளரா என்றால் மூன்று பேருக்கும் எழுதிக்கொடுத்துள்ளார். அதில் பிரதிவாதி மகேந்திரன் மட்டும் பதிவு செய்துக்கொண்டார். மகேந்திரனுக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் சொத்துக்களை பதிவு செட்டில்மெண்ட் ஆவணம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ.2** ஆவணத்தில் வீரமணி மற்றும் சேகர் ஆகியோருக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்துவிட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான்.

8) மேற்படி **வா.சா.ஆ.2** ஆவணத்தில் எனது கணவரின் சகோதரரான இந்த வழக்கில் சேராத சேகர் என்பவரால் சாட்சி கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என் மாமனாரின் மகன்களான என் கணவர் வீரமணி, பிரதிவாதி மகேந்திரன் மற்றும் வழக்கில் சேராத சேகர் ஆகியோர் சேர்ந்து பேசி ஒத்துக்கொண்டு அதன் அடிப்படையில் தான் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டது என்றால் நிலத்தை பொறுத்து மட்டும் தான் பேசி முடிவு செய்யப்பட்டது. வீடு பொருத்தல்ல.

9) வீடு உள்பட பூரா சொத்துக்களையும் சேர்த்து தான் பாகம் பேசி தீர்க்கப்பட்டதென்றாலும், வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் கணவர் கையொப்பம் செய்யாத காரணத்தினால் அதனை மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.06.01 18:46:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்